**2011**

ஜுலை

**1**

**வெள்ளி**

காலை

**2இரா. 2:1–14**

தி. வ.

2இரா. 2 : 4

**“...நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தருடைய ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன்”**

மாலை

**லூக். 5:1–11**

சிந்தனை

**பாடுகளை சுமக்காதவன், உண்மையான சீடனாய் பின்தொடர முடியாது.**



# கிறிஸ்தவ சீடத்துவம் : பின்தொடர்தல்

*அன்பர்களே! பாரத நாட்டில் குரு — சீடன் முறை இருந்து வந்தது. இந்த குருக்கள் சீடர்களுக்கு மாதிரியாக இருப்பது மட்டுமின்றி பல நல்ல செயல்களைச் சொன்னது மட்டுமின்றி செய்தும் காட்டினார்கள். இன்றைய தியானப்பகுதி 2 இரா. 2:1—14 வரை படிக்கும்போது ஒரு உண்மையான சீடத்துவத்தைக் குறித்துச் சொல்லப்படுகிறது. எ—யாவை எ—சா விடாமல் பற்றிப் பிடிக்கின்ற ஒரு அனுபவம். வாழ்விலே எத்தனை துன்பங்கள் வந்தாலும் உம்முடன் இருப்பேன் என்றார் எ—சா. ஏனென்றால் எ—யாவை ஒரு உண்மையான இறைத் தொண்டனாகக் காண்கிறார். எ—யாவின் இறைப்பணி, உண்மையை உரைக்கின்ற பண்பு, பாடுகளை ஏற்கின்ற சகிப்புத் தன்மை அனைத்தும் எ—சாவைக் கவர்ந்து கொண்டது. திருமறையை படிக்கும்போது பலருடைய உண்மையானப் பின்தொடர்தல் நம்மையும் கிறிஸ்துவை பின்தொடர அழைக்கிறது. பழைய ஏற்பாட்டில் ரூத் தன் மாமியாகிய நகோமியை எத்தகைய சூழ்நிலையிலும் விடமாட்டேன் என்கின்ற நம்பிக்கையில் உறுதுணை அனுபவம் நமக்கு ஒரு வாழ்க்கைப்பாடமாக அமைகிறது.*

*மத். 4 ; 25—இல் மக்கள் பெருந்திரளாக இயேசுவைப் பின்தொடர்ந்தனர். ஏனென்றால் இயேசுநாதர் இறைவனுடைய அரசைக் குறித்த சிந்தனையை மக்களிடம் விதைத்தார். இது மக்களுக்கு முழு விடுதலையைக் கொடுப்பதாக அமைந்தது.*

*இந்த காலைப் பொழுதில் நம்முடைய வாழ்வு முறைகளைச் சற்றுத் திரும்பிப் பார்ப்போமா? உண்மையான பாடுகள் பரிகாசங்கள், நிந்தைகள் மத்தியிலும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோமா? அல்லது நமக்காக பாடுகளை ஏற்ற பரமனின் பாதையைத் தொடரத் தயக்கம் காட்டி பின்வ—த்துச் செல்கிறோமா? கிறிஸ்துவின் உண்மையான சீடர்களாக வாழ நம்மை அர்ப்பணித்து அவரை பின்தொடர்வோம்.*

2011
ஜூலை
2
சனி

காலை
கலா. 6:1–10

தி. வ.
கலா. 6 : 2
**“ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, ... கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்”**

மாலை
சங். 55

சிந்தனை
**நம்முடைய பாரத்தை பிறர் மீது சுமத்துவதல்ல, பிறர் பாரத்தை சுமப்பதுதான் உண்மையான கிறிஸ்தவ சீடத்துவம்.**

மன்னா சேர்ப்போம்

# பிறர் பாரத்தை தாங்குதல்

*“தன்னை வெறுத்து ந—வடைந்தோர் மீது காட்டுகின்ற கரிசனை” தான் கிறிஸ்தவ சீடத்துவம். இயேசு கிறிஸ்துவின் நற்செய்திக்காக ஏற்படுகின்ற துன்பத்தைக் கிறிஸ்துவுக்காகச் சகித்துக் கொள்வதும் ஆகும். அன்னை தெரசா தன்னை திருப்பணிக்கென அர்ப்பணித்த நேரத்தில் தான் தங்கியிருந்த கன்னியர் மடத்தி—ருந்து ந—வுற்ற, ஆதரவற்ற மக்களின் வீடுகளுக்கு செல்வது வழக்கம். அப்படி ஒருநாள் ஒரு வீட்டில் சென்றபோது அது பாழடைந்து கிடந்தது. தெரசா சத்தம்போட்டு கூப்பிட்டார். ஒரு முனகல் சத்தம் மட்டும் கேட்டது. உள்ளே சென்று பார்த்தப்போது ஒரு முதியவர் ந—வடைந்து சாகும் தருவாயில் ஆதரவின்றி இருட்டில் கிடப்பதைப் பார்த்து மனம் பதைத்துப்போனார். அதோடு நின்று விடாமல் அந்த முதியவருக்கு தேவையான உதவிகளைச் செய்து, அந்த வீட்டை சுத்தம் செய்து அது வரை எரியாமல் இருந்த விளக்கையும் ஏற்றிவைத்து விட்டு பெரியவரிடம் பேசினார். பின்னர் அவரிடம் இன்று முதல் எல்லா மாலையிலும் நானோ, கன்னியர் மடத்தி—ருந்து வேறு யாராவதோ வந்து உங்களை விசாரிப்பார்கள் என கூறிச் சென்றார். முதியவரும் அகமகிழ்ந்தார். பின்னர் தெரசா இந்தியா வந்தார். பல ஆண்டுகள் கழித்து தன் நாட்டிற்கு சென்று அந்த முதியவரைச் சந்தித்தபோது அந்த முதியவர் சொன்னார். தெரசா அவர்களே நீங்கள் என் இல்லத்தில் மட்டுமல்ல உள்ளத்திலும் விளக்கேற்றினீர்கள்.*

*கலாத்தியர் கடித்தில் தூய பவுல் சொல்லகிறார். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்க வேண்டுமென்று. பிறர் பாரத்தை சுமக்க நாம் ஆயத்தமா? அல்லது சுமப்பது கடினம், சுமத்துவது இலகுவானது எனக்கூறி சிலுவைகளைச் செய்து கொண்டு அயலானைத் தேடுகிறோமா? தற்காலத்தில் பலருக்கு தமக்கு அடுத்தவர்களின் மகிழ்ச்சியை கேட்க மனம் இடம் கொடுப்பதில்லை. கிறிஸ்து காட்டும் பாதை இதுவல்ல. நமது சுமைகளை அவர் சுமந்தார். ஆகவே நாம் பிறர் பாரத்தை சுமக்க கடமைப்பட்டவர்கள் என்பதை மறவாதிருப்போம்.*

# நற்கிரியைகளில் உண்மை

2011
ஜூலை
3
**ஞாயிறு**
**பொறுப்பாண்மை ஞாயிறு**

காலை
ரோ. 2:1–11

தி. வ.
ரோ. 2 : 6
**“தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்”**

மாலை
நெகே. 4:1–16

சிந்தனை
**நற்செய–ல் உண்மை உயர்வுக்கு வழிகாட்டும்.**



இறைவன் கிருபையாகத் தந்திருக்கின்ற இந்தப் புதிய நாளில் நற்கிரியைகளில் உண்மையாக இருக்க வேண்டும் என அழைக்கப்படுகிறோம். இன்றைய தியானப் பகுதியில் ஆண்டவர் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார் என்று பவுலடிகளார் சொல்லுகிறார். நம்முடைய தவறுகளும், நல்ல செயல்களும் நம்முடன் கூடவே வருகிறது. நல்ல குணம் வரும்போது நல்ல செயல்களைத் தானாகச் செய்ய முடியும். நல்ல செயல்களுக்கு முன்மாதிரி இயேசு கிறிஸ்துவே. அவரின் செயல்கள் அனைத்தும் இறைவனுடைய திருவுள விருப்பத்தை நிறைவு செய்வதாகவேயிருந்தது. இயேசுநாதர் நற் செயல்களைச் செய்பவராகவேச் சுற்றித் திரிந்தார். இயேசு கிறிஸ்துவின் செயல்களை அனுபவித்த மக்கள் இறைவனைப் போற்றிப் புகழ்ந்தனர்.

தீத்துவே, நீ நற்கிரியைகளுக்கும், நல் நடத்தைக்கும் உன்னை மாற்றவர்களுக்கு மாதிரியாக காண்பித்துக்கொள். ஏனென்றால் நம்முடைய செயல்களுக்குத் தக்கதாய் ஆண்டவர் பலனளிக்கப் போகிறார் என்கிறார் தூய பவுல் *(தீத்து 2 : 7).*

ஒருமுறை காந்தியடிகளிடம் வந்து ஐயா என் மகன் அதிகமாக சாக்லெட் சாப்பிடுகிறான். எனவே நீங்கள் அவனிடம் சாக்லெட் சாப்பிடாதே என அறிவுரை கூற வேண்டுமென கேட்டாள் தாய். அதற்கு காந்தியடிகள் அந்த தாயிடம் இன்னும் பத்து நாட்கள் கழித்து வர கேட்டுக்கொண்டார். சரியாக பத்து நாட்கள் கழித்து அந்த சிறுவனைக் கூட்டிக்கொண்டு அந்த தாய் வந்தபோது அவனிடம் சாக்லெட் சாப்பிடக் கூடாது எனக்கூறி அதன் தீமையை எடுத்துச் சொன்னார். அந்நேரம் அந்த தாய் கேட்டார்கள் இதை அந்த நேரமே சொல்ல வேண்டியதுதானேயென்று. அப்போது காந்தியடிகள் சொன்னது அந்த அம்மாவை நெகிழ வைத்தது. அது என்னவென்றால் எனக்கும் சாக்லெட் சாப்பிடும் பழக்கம் இருந்தது. ஆனால் தற்போது நான் நிறுத்தி விட்டேன் அதனால் தான் தற்போது அறிவுரை சொல்ல முடிகிறது. நாம் முத—ல் நல்ல செயல்களை செய்ய பழகி கொள்வோம். பின்னர் மற்றவர்களைப் பழக்கப்படுத்துவோம்.

# சிறுமையுற்றோரை விசாரித்தல்

2011
ஜூலை
4
**திங்கள்**

காலை
எரே. 22:13–16

தி. வ.
எரே. 22 : 16
**“அவன் சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான் அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான்”**

மாலை
மத். 20:29–34

சிந்தனை
**சிறுமையுற்றோரை விசாரிப்பதால் இறை உறவு வளரும்.**

மன்னா சேர்ப்போம்

யூதாவின் ராஜாவும் அவனோடு உள்ளவர்களும் சிறுமைப்பட்ட மக்களைச் சரியாக விசாரிக்கவில்லை. இதனால் கடவுள் அவனுக்கு எச்சரிப்பைக் கொடுக்கிறார். ஏனென்றால் மக்களின் நியாயங்களை விசாரிக்கவும், சிறுமையுற்ற மக்களுக்கு உதவி செய்யவும்தான் கடவுள் தலைவர்களை ஏற்படுத்துகிறார். ஆனால் இறைவன் நமக்கு தந்திருக்கின்ற கடமையைச் செய்யாவிட்டால் இறைவனுடைய கோபத்திற்கு நாமும் உள்ளாக்கப்படுவோம்.

இன்றைக்கு நாம் பல கோணங்களில் சிறுமைப்படுகின்றோம். பிறரை சிறுமைப் படுத்துகிறோம். அநியாய அமைப்புகளால், ஏழை, பணக்காரன், படித்தவன், படிக்காதவன், வன்முறை, சுயநலம் இன்னும் சுயநல போங்கு இதனால் பலர் சிறுமைப்படுத்தப்படுகின்றனர். இன்றைய உலகில் வளர்ந்து வருகின்ற சமூக அமைப்புகள், விஞ்ஞான வளர்ச்சி மற்றும் தவறான வியாபார பெருக்கினால் ஒரு கூட்ட மக்கள் சிறுமைப்படுத்தப்படுகின்றனர்.

1 சாமுவேல் 1 : 11—இல் அன்னாள் ஆலயம் சென்று தன் சிறுமையை மாற்ற இறைவனிடம் மன்றாடினாள். இறைவன் அவருடைய சிறுமையை மாற்றினார். நம் வாழ்விலே நம்மை வெறுப்பவர்களால், வறுமையினால், குடும்பச் சூழ—னால், அறியாமையினால் எத்தனையோ எதிர்பாராத நிகழ்வுகள் அனுதினமும் நம்மைச் சிறுமைப்படுத்த பின் தொடர்கிறது. இத்தகையச் சூழ்நிலையிலும் இறைவனை நோக்கிப் பார்க்கும்போது நம்முடைய சிறுமை மாற்றப்படுகிறது. இறைமக்களின் தாழ்மையின் சிறுமையினை நினைவில் நிறுத்தி ஆசிவழங்கும் ஆண்டவர் நம்முடன் இருக்கிறார். இந்த உணர்வுடன் இறைவனைப் பற்றி வாழ்வதே வெற்றி வாழ்விற்கு நம்மை வழிநடத்தும் பிறருடைய சிறுமையான நிலையினை மாற்றுவதற்கு நாம் நம்முடைய வாழ்வினை அர்ப்பணிக்க இந்த காலைப் பொழுதில் நம்மை தயார்படுத்தி கொள்வோம்.

# கொடுப்பதில் உக்கிராணத்துவம்

2011

ஜுலை

5

**செவ்வாய்**

காலை

2கொரி. 8:1–9

தி. வ.

2கொரி. 8 : 2

**"...தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்"**

மாலை

நெகே.13:14–22

சிந்தனை

**கொடுக்க, கொடுக்க இன்பமும், நிறைவும் வரும்**

மன்னா சேர்ப்போம்

உக்கிராணத்துவம் என்பது நிர்வாகம், பொறுப்பு இவற்றுடன் நேரடியான தொடர்பு கொண்டதாகும். அப்படியானால் கொடுப்பதிலும் உக்கிராணத்துவம் இருக்க வேண்டும் என திருமறைக் கற்றுத் தருகிறது. இன்றைய சூழ—ல் அநேக மக்கள் எனக்குரியதும் எனக்கே. பிறருக்குரியதும் எனக்கே என்ற நிலையில் வாழ்க்கை வாழ்கின்றனர். பிறருக்கும் திருச்சபைக்கும் கொடுப்பதில் உக்கிராணத்துவம் இல்லாமல் இருக்கின்றனர். இன்றைய தியானப் பகுதியில் மக்கெதோனியா திருச்சபை மக்கள் மிகுந்த உபத்திரவத்திலேச் சோதிக்கப்படுகையிலும், மிகவும் கடுமையான தரித்திரர்களாயிருந்தும் அவர்கள் பரிபூரண சந்தோஷத்தினால் மிகுந்த உதாரத்துவமாய் கொடுத்தார்கள்.

நம்முடைய கொடுக்கும் தன்மை எப்படி உள்ளது. திருச்சபைக்கு உண்மையாகக் கொடுக்கிறோமா, வறுமையில், தேவையில் இருக்கின்ற மக்களைக் கண்டுபிடித்துக் கொடுக்கிறோமா. அல்லது இன்று ஆசீர்வாதம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் மட்டும் கொடுக்கிறோமா? இறைவனுக்கு நாம் கொடுக்கிறோம் என்ற உணர்வில் கொடுப்பதே இறைவன் எதிர்பார்ப்பதாகும். கொடுப்பதில் உக்கிராணத்துவம் என்பது எப்படி கொடுக்கிறோம். அதை யாருக்கு கொடுக்கிறோம் என்பது மிக மிக முக்கியம்.

பேராயர் V.S. அசரியா சின்ன வயதில் ஆலயம் சென்றபோது காணிக்கை நேரத்தில் தன்னிடம் காணிக்கைப் போட காசு இல்லை என்பதை ஊணர்ந்தார். ஆனால் அந்த குழந்தை பருவத்திலும் காணிக்கைப் போடாம—ருப்பது எப்படி என்பதை உணர்ந்து தன் கையில் கிடந்த தங்க வளையலை கழற்றி காணிக்கை தட்டில் போட்டுவிட்டார். வீட்டில் வந்தபோது அம்மாவிடம் சொன்னபோது அம்மாவும் பாராட்டினார். அசரியா பிற்காலத்தில் உலகும் போற்றும் தலைவராக உயர்ந்தார்.

2011

ஜூலை

6

**புதன்**

**பேராருள் பெருந்திரு. I.R.H. ஞானதாசன் நினைவு நாள்**

காலை

மத். 25:14–30

தி. வ.

மத். 25 : 23

**"...உண்மையுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே ... அதிகாரியாக வைப்பேன்"**

மாலை

உபா. 15:12–18

சிந்தனை

**பணிவிடையில் பொறுப்புணர்வு உயர்வான அதிகாரத்தைப் பெற்றுத் தரும்.**

மன்னா சேர்ப்போம்

# பணிவிடையில் பொறுப்புணர்வு

*பேராயர் I.R.H. ஞானதாசன் குறிப்பிடும் போது "பிறருக்கு ஒளிகாட்டவே நாம் வெளிச்சமாய் வைக்கப்பட்டிருக்கிறோம்" என்றார்.*

*நாம் படித்த திருமறை பகுதியில் கொஞ்சத்தில் உண்மையுடையவர்களாக இருந்தால் அநேகத்தின் மேல் அதிகாரியாக வைப்பேன். என்கிறார் இயேசு. எஜமானன் தன்னிடம் பணித்த பணிவிடைகளைப் பொறுப்புடன் நிறைவேற்றி தான் பெற்ற செல்வத்ததை இருமடங்காக்கி எஜமானன் எப்பொழுது வந்து விட்டாலும் அதை ஒப்படைக்கக் காத்திருந்தான். எஜமானன் வருகையால் மகிழ்ந்து போன அவன் கண்ணியத்துடன் தான் பெற்றுக்கொண்டதையும் சம்பாதித்து சேர்த்ததையும் உண்மையுடன் ஒப்படைக்கிறான். உண்மையுள்ள மனிதன் பரிபூரண ஆசீர்வாதம் பெறுவான். நாம் நம்முடைய பணிகளை எப்படி செய்கிறோம். உண்மையாக கடவுளுக்குப் பயந்து செய்கிறோமா. இல்லை தான் தோன்றித்தனமாகச் செய்கிறோமா என்பது மறு ஆய்வு செய்யப்பட வேண்டியது.*

*இன்றைய பணிவிடையில் உண்மை இல்லாததால் லஞ்சம், பேரம், பணிகளை சரிவர செய்யாமை, கடமை தவறுதல், கடமையில் கண்ணியம் இல்லாமை நிலவுகிறது. இதனால் நாட்டு மக்கள் பல இடைஞ்சல்களுக்கு உள்ளாகின்றனர். இறைவனும் வேதனைப்படுகிறார். முன்னால் தலைமை தேர்தல் ஆணையர் —ங்டோ சொல்லம்போது, என்னுடைய பணியில் உண்மையாக இருந்ததால் 17 முறைக்கு மேல் அங்கும் இங்கும் பணிமாற்றம் செய்யப்பட்டேன். ஆனால் அன்று உண்மையாக இருந்ததால் இந்த உயர்வான தேர்தல் ஆணையர் என்ற பணி எனக்குக் கிடைத்தது என்றார்.*

*இன்றைய திருச்சபை திருப்பணியை மட்டும்தான் உண்மையானப் பணி என்று எண்ணுகிறது அப்படியல்ல நாம் எந்தப் பணியில் இருந்தாலும், எந்த வேலைகளைச் செய்தாலும் அதனைப் பொறுப்புணர்வோடு உண்மையாக செய்யும் போது அதுதான் உண்மையானப் பணியாகும்.*

# அழைப்பில் உண்மை

2011
ஜூலை
7
**வியாழன்**

காலை
ஆதி. 12:1–9

தி. வ.
ஆதி. 12 : 2
**“நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி,... உன் பேரைப் பெருமைப் படுத்துவேன்”**

மாலை
1தெச. 4:1–8

சிந்தனை
**அழைப்பில் உண்மை மேன்மை தரும்**



உலகம் என்னும் அழகிய தோட்டத்தைப் படைத்துப் பாதுகாக்க மனிதனைப் படைத்தார். இப்படி இறைவனால் படைக்கப்பட்ட மனிதர்கள் இறைப்பணி செய்யப் பணியாளர்களாக அழைப்பதை விவி—யத்தில் நாம் பல இடங்களில் காண முடியும். இறைப்பணிக்கு அழைப்பு மட்டும் போதாது. அழைக்கப்பட்ட அழைப்பில் உண்மையாக இருக்க வேண்டும். ஏனென்றால் இறைமக்கள் அனைவரும் இறைவனால் அழைக்கப்பட்டவர்களே.

அழைப்பின் நோக்கம் மக்களுக்குப் பணி செய்வதே. அழைப்பில் இறைவன் தன் விருப்பத்தை நிறைவு செய்கின்றார். அழைப்பு என்றவுடனே இறைவனின் திருப்பணி மட்டுமல்ல அல்லது நற்செய்தி பரப்புவது மட்டுமல்ல. இந்த உலகில் என்ன வேலைகள் செய்தாலும் அது இறைவனின் அழைப்பு என உணர்ந்து அதில் உண்மையாக இருக்க அவசியம். ஆபிரகாமின் அழைப்பு பூமியின் மக்கள் எல்லாம் தனக்குள் ஆசீர்வதிக்கப்படுவதற்கும், மோசேயின் அழைப்பு இஸ்ரயேல் மக்களை விடுவிப்பதற்கும், பவுலடிகளாரின் அழைப்பு யூதரல்லாதவர்களுக்கும் நற்செய்தி சொல்வதற்கும் ஆகும். நம்மையும் இறைவன் தன் திட்டத்தை நிறைவேற்ற அழைக்கிறார்.

ஐடா ஸ்கடர் மருத்துவப் பணியை துவங்குவதற்கு முன்பு அமெரிக்காவில் செல்வச் செழிப்பாக வாழ்ந்தார். ஆனால் வெல்லூரில் மருத்துவ உதவி கிடைக்காமல் மடிந்து கொண்டிருக்கும் மானிடர் மேல் கனிவு கொண்டு அவர்களுக்காக மருத்துவ கல்வியைக் கற்று சுட்டெரிக்கும் வெயில் என்று பாராமல் வெல்லூரில் மருத்துவப் பணியை ஆரம்பித்து இன்று உலகம் போற்றுகின்ற C.M.C. மருத்துவ கல்லூரியை துவங்கினார். ஏனென்றால் ஐடா இறை அழைப்பை உண்மையாக உணர்ந்தார். நாமும் அழைப்பை உண்மையோடு ஏற்று நற்சான்று பகருவோம். இறைவனின் வருகை மட்டும் நாம்

2011

ஜுலை

8

**வெள்ளி**

காலை

ரோ. 14:1–12

தி. வ.

ரோ. 14 : 12

**“. . . நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்”**

மாலை

2இரா. 22:1–7

சிந்தனை

**மனச்சான்றுள்ள வாழ்வு உயர்வுக்கு வழிகாட்டும்**



# கணக்கு ஒப்புவித்தலில் உண்மை

இவ்வுலகத்தில் எத்தனை ஆண்டுகள் வாழ்கிறோம் என்பதல்ல முக்கியம். எப்படி வாழுகிறோம் என்பதுதான் முக்கியம். எப்படியும் வாழுவதல்ல மனித வாழ்வு. இப்படித்தான் வாழ வேண்டும் என்று வரையறை இருக்கின்றது. எல்லா மனிதருக்கும் பொறுப்பு, கடமை போன்றவை கடவுள் கொடுத்திருக்கின்றார் (ஆதி. 2 : 15). ஆகவே நாம் எப்படி வாழுகிறோம் என்பதை கடவுளுக்கு நாம் கணக்கு கொடுக்க வேண்டும்.

உலகில் வாழும் அத்தனை மனிதனும் இறைவனின் பார்வையில் உள்ளவன் அனைத்தையும் அறிந்தவர் ஆண்டவர். மனித எண்ணங்களையும் உணர்வுகளையும் அவர் அறிந்தவர் ஒவ்வொரு மனிதனும் தன்னைக்குறித்து இறைவனுக்கு கணக்கு ஒப்புவிக்க கடமைப்பட்டவன். இன்றைய திருமறைப் பகுதியில் மற்றவர்களை குற்றவாளியாக்காதே என்று பவுல் கூறுகிறார். இயேசுநாதரும் இவ்வசனத்தைச் சுட்டிக் காட்டுகிறார் (மத். 7 : 1). தன்னில் கறைகள் நிரம்பி இருக்க மற்றவர்களை குறை கூறுவதற்கு எந்த தகுதியும் இல்லை.

பரிசேயர்கள் வெளிவேடம் காட்டி வாழ்ந்தார்கள். ஆகவே இயேசுநாதர் இவ்வாறு கூறினார். பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு அளிக்காதீர்கள். அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள். நீங்கள் அளிக்கும் தீர்ப்பையே நீங்களும் பெறுவீர்கள். சில சமயங்களில் நாமும் அந்த பரிசேயர்களைபோல் வாழுகின்றோம். அனால் இயேசுநாதர் பரிசேயர்களிடத்தில் சொன்னதுபோல் நம்மிடத்திலும் திருமறை வழியாகச் சொல்லுகிறார் என்பதை மறந்துவிடக் கூடாது. கொஞ்சத்திலே உண்மையாயிருந்தால் உன்னை அநேகத்தின் மேல் அதிகாரியாக வைப்பேன் என்று இயேசு கூறினார்.

அன்பர்களே! பற்பல பணிகளில் இணைக்கப்பட்டிருக்கும் நாம் நம்முடைய மனச்சான்றின்படி இறைவனுக்குக் கணக்கு ஒப்புவிக்கும் நோக்கோடு பணிவிடைகளைச் செய்வோம்.

2011

ஜூலை

9

**சனி**

காலை

நெகே. 2:11–18

தி. வ.

நெகே. 2 : 17b

**“...எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள்”**

மாலை

1திமோ. 4:6–16

சிந்தனை

**வருமுன் காப்பவன் அறிவாளி, வந்தபின் நினைப்பவன் கோமாளி.**

மன்னா சேர்ப்போம்

# காலத்தை பயன்படுத்துவதில் பொறுப்புணர்வு

*சிறையிருப்பின் இறுக்கமானச் சூழ—ல் வாழ்ந்து கொண்டிருந்த இஸ்ரயேல் மக்களுள் நெகேமியா தீர்க்கரும் ஒருவர். அர்தசாஸ்டா மண்ணின் அரண்மனையில் தன் கடமையைச் சிறப்பாய் நிறைவேற்றி வந்த தருணத்திலும் தன் நாட்டைக்குறித்த பாரமும் எருசலேம் ஆலயம் மற்றும் பட்டணத்தைக் குறித்த பாரமும் நீங்காத வேதனையை அவருக்குத் தந்து கொண்டிருந்தது. கடவுளின் பாதையை விட்டு விலகிச்சென்ற மக்களால் ஏற்பட்ட இந்நிலையி—ருந்து விடுதலைபெறும் வழியினையும் மனதில் ஆய்ந்து கொண்டிருந்தார்.*

*எருசலேமின் மதில்கள் இடிக்கப்பட்டு தீக்கரைக்கப்பட்டு கிடக்கின்றது. இதைக் கேள்விப்பட்ட நெகேமியா சூசானி—ருந்து எலுசலேமுக்கு பயணம் மேற்கொண்டு விடுகிறார். இடிந்து கிடந்த எருசலேம் மதில்களை பார்த்து பின் யூதர்களிடத்திலும், குருக்களிடத்திலும், உயர்குடிமக்களிடத்திலும், அலுவலர்களிடத்திலும் நெகேமியா கூறியதாவது எவ்வித இழிநிலையில் நாம் இருக்கிறோம் என்பதையும் எருசலேம் பாழடைந்து கிடப்பதையும், அதன் அலங்கம், வாயிற்கதவுகள் தீக்கிரையாக்கப்பட்டிருப்பதையும் நீங்களே பாருங்கள்! எனவே, இனியும் நமக்கு சிறுமை வராதபடி, எருசலேமின் மதில்களைக் “கட்டியெழுப்புவோம் வாருங்கள்” என்றார். அவர்களும் வாரும் கட்டுவோம் என்றனர்.*

*காலத்தை பயன்படுத்துவதில் பொறுப்புணர்வோடு நெகேமியா செயல்பட்டார். காலத்தைத் தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று திருமறைக் கூறுகிறது. காலம் பொன் போன்றது என்று நம் முன்னோர்கள் கூறுவார்கள். ஆகவே காலத்தைக் கடந்து நாம் வருந்தாதபடி நாம் செய்ய வேண்டிய காரியங்களை அதினதின் காலங்களில் கடவுளின் துணையோடு கருத்துடன் செய்து பயனுள்ள வாழ்க்கை வாழுவோம்.*

# பயிற்றுவிக்கும் ஆண்டவர்

2011

ஜூலை

10

**ஞாயிறு**

**இறையியல் கல்வி ஞாயிறு**

காலை

மத். 7:21–29

தி. வ.
மத். 7 : 24

**“நான் சொல்–ய ... வார்த்தைகளைக் கேட்டு... செய்கிறவன்... கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின .... ஒப்பிடுவோன்”**

மாலை

உபா. 29:1–9

சிந்தனை

**தெரிந்ததை கற்று கொடுத்து தெரியாததை கற்று கொள்வோம்.**

மன்னா சேர்ப்போம்

“கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு” என்பது ஔவையார் வாக்கு. ஆகவே நாம் கற்றுகொள்ளுவது அவசியம். உலக அறிவையும், திருமறை அறிவையும், செம்மையான முறைமையிலே கற்றுகொள்ள வேண்டும் என்று வள்ளுவர் இவ்வாறு கூறுகிறார்.

“கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக”

குற்றமறக்கற்று தெளிவுறக்கற்று கற்றபின் கற்றதற்கு ஏற்ப நடப்பது சிறப்பான வாழ்வு. உலகத்தில் நன்மையும் தீமையும், நல்லதும் கெட்டதும், உண்மையும் பொய்மையும், ஏமாறுதலும் ஏமாற்றுதலும், வாழ்வும் சாவும் இருக்கிறது. இவற்றுள் வாழ்க்கைக்கு தேவையானவற்றை தெரிந்தெடுப்பதற்கு கல்வி இன்றியமையாதது.

இந்த காலை நேரத்தில் பயிற்றுவிக்கும் ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்துக் கற்றுகொள்வோம். இயேசுநாதர் மனித வாழ்வின் இருவகை அடித்தளங்களை திருமறையின் வழி கற்றுத் தருகிறார். நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறை மீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவர். நான் சொல்லும் இந்த வார்த்தைகளை கேட்டு இவற்றின்படி செயல்படாத எவரும் மணல் மீது தம் வீட்டைக் கட்டிய அறிவி—க்கு ஒப்பாவர். ஆகவே பயிற்றுவிக்கும் இயேசுவினிடத்தி—ருந்து கற்றுகொள்ளுவோம்.

மத். 11 : 29—இல் நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுகொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று இயேசு குறிப்பிடுகிறார். மரியாள் ஆண்டவருடைய காலடி அருகில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டு நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்து கொண்டாள். ஆகவே நாமும் பயிற்றுவிக்கும் ஆண்டவர் சொல்வதை கேட்டுக் கற்றுக் கொடுப்போம் ஆண்டவரின் பாதையைப் பின் தொடர்வோம்..

2011
ஜூலை
11
**திங்கள்**

காலை
எபே. 4:7–16

தி. வ.
எபே. 4 : 12,13
**“பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும் ஏற்படுத்தினார்”**

மாலை
1சாமு. 29:1–11

சிந்தனை
**நற்செய்தியைப் பொருளுள்ள வகையில் பகிர்ந்து கொள்.**



# இறைமக்களைப் பயிற்றுவித்தல்

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பது முதுமொழி. இறைமக்கள் இறைப்பணி செய்ய முன்வர வேண்டும். உலகத்தில் எவ்வகை பணியாக இருந்தாலும் அது இறைப்பணி. உதாரணமாக ஆசிரியப் பணி, போதகப்பணி, மருத்துவப் பணி என்று அடுக்கிக் கொண்டே போகலாம். இறைப்பணியிலும் ஏமாற்றுகள் இருக்கிறது என்று பவுலார் எபேசு திருச்சபைக்கு சொல்லுகின்றார். இனி நாம் குழந்தைகளைப்போல் இருக்ககூடாது. மனிதருடைய தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் தவறுக்கு வழிநடத்தும் ஏமாற்று வழிகளையும் நம்பி, அவர்களுடைய போதனைகள் என்னும் காற்றால் அடித்துச் செல்லப்பட்டு அங்குமிங்கும் அலைகழிக்கப்படக்கூடாது. மாறாக, அன்பின் அடிப்படையில் உண்மைப் பேசி, தலையாகிய கிறிஸ்துவைப் போன்று எல்லாவற்றிலும் வளர வேண்டும் (எபே. 4 : 14, 15)

நமக்கு கடவுள் இறைமக்களை இறைபணிக்கு பயிற்றுவிக்கும் சூழல்கள் வேறுபட்டவை. ஆனால் அவர் அழைப்பின் நோக்கம் ஒன்றுபட்டவை. இறைமக்கள் அனைவரும் இறைமைந்தன் இயேசுவைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் வளர்ந்து கிறிஸ்துவின் நிறைவான வாழ்வைப் பெறுவதே (எபே. 4 : 11) அவரது நோக்கமாகும். சபை பக்திவிருத்தி அடையவும், பரிசுத்தவான்கள் தூயவாழ்வை நிலைநிறுத்திக் கொள்ளவும் இறைவன் பயிற்சியைத் தருகிறார். கடவுள் தந்திருக்கும் எவ்வகை பணியாக இருந்தாலும் உண்மையுடன் உழைக்க திருமறை வழியாக பயிற்றுவிக்கிறார்.

மனிதருக்காக அன்றி கடவுளுக்காகவே செய்வது போல நல்மனத்தோடு வேலை செய்யுங்கள். மனிதர்களுக்கு உகந்தவர்களாகுமாறு, வேலை செய்வதாகக் காட்டிக் கொள்கிறவர்களாயிராமல் கிறிஸ்துவின் பணியாளராய் கடவுளின் திருவுளத்தை உளமார நிறைவேற்றுங்கள் (எபே. 6 : 5, 6).

2011

ஜூலை

12

**செவ்வாய்**

காலை

1பேது. 1:1–9

தி. வ.

1பேது. 1 : 7

**“...உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும் போது...கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்”**

மாலை

யோபு 23:1–17

சிந்தனை

**சோதனைகள் வேதனைக்கு அல்ல சாதனைகள் புரிந்திடவே.**

# நம்பிக்கையைப் பலப்படுத்தும் ஆண்டவர்

நம்பிக்கை [illegible] ஆன்மீக வாழ்வு. ஒருவர் கடவுளின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கை அந்நபரை இறைவனில் நிலைத்திருக்க வலுவூட்டுகிறது. துன்பமாக இருந்தாலும். இன்பமாக இருந்தாலும், வெற்றியானாலும், தோல்வியானாலும் இந்த நம்பிக்கை துவண்டு போகாமலும், வீழ்ச்சியுறாமலும் செய்கிறது.

நேபுகாத்நேச்சர் நாட்டிய பொற்சிலையை நாட்டு மக்கள் வணங்கவில்லையென்றால் திச்சூளையில் போடப்படுவீர்கள் என்று நாட்டு மக்களுக்கு அறிக்கை விடுத்தார். ஆனால் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, அப்பொற்சிலையை வணங்கவில்லை. இவர்கள் மூவரும் அரசனை நோக்கி பதில் மொழியாக, இதைக் குறித்து நாங்கள் உமக்கு மறுமொழிக் கூற தேவையில்லை. அப்படியே எது நிகழ்ந்தாலும், நாங்கள் வழிபடுகின்ற கடவுள், எரிகின்ற தீச்சூளையினின்று எங்களை மீட்க வல்லவர். அவரே எங்களை உம் கையினின்றும் விடுவிப்பார். அப்படியே அவருக்கு மனமில்லாமல் போனாலும், அரசரே! நாங்கள் உம்முடைய தெய்வங்களை வழிபடமாட்டோம். நீர் நிறுவிய பொற்சிலையையும் நாங்கள் தொழப்போவதில்லை. இது உமக்கு தெரிந்திருக்கட்டும் என்றனர். இது தான் நம்பிக்கையின் உச்சநிலை. அவர்கள் விசுவாசம் சோதிக்கப்பட்ட நிலையிலும் கடவுளின் துணையால் கனமும், மேன்மையும் கண்டார்கள்.

ஒருமுறை இயேசு பேதுருவின் நம்பிக்கை தளராதிருக்க வேண்டினார் (லூக். 22 : 32). மற்றவர்களையும் நம்பிக்கையில் பெலப்படுத்த இயேசுநாதர் ஆலோசனைக் கூறுகிறார் (லூக். 22 : 32). எபிரேய ஆசிரியர் நம்பிக்கையின் மேன்மையை கூறுகிறார் (எபி. 11 : 33—40). ஆகவே துன்பங்கள் பெருகும் நிலையிலும் இறைவன் மீது அசையா நம்பிக்கை கொண்டவர்களாய் வாழ இறைபாதம் நம்மை அற்பணிப்போம்.

# துன்பத்தில் கற்றுக்கொள்தல்

2011

ஜூலை

13

**புதன்**

காலை

சங். 119:65–72

தி. வ.

சங். 119 : 71

**“நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகிறேன்”**

மாலை

ரோ. 5:1–5

சிந்தனை

**கடவுள் நம்மை துன்பங்களி–ருந்து விடுவிக்காமல், துன்பங்களினூடே விடுவிக்கின்றார்.**

மன்னா சேர்ப்போம்

உலகில் உங்களுக்கு துன்பம் உண்டு. எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின் மீது வெற்றி கொண்டுவிட்டேன் என்றார் இயேசு. ஆட்டிடையனாய் மந்தைகளின் பின்னால் சென்றுகொண்டிருந்த தாவீது இறைவனின் வழிகாட்டுத—ல் சாமுவேல் தீர்க்கரால் மன்னனாக அருட்பொழிவு செய்யப்பட்டார். அன்று முதலே அவர் வாழ்வில் பல இன்னல்களைச் சவுல் மன்னரால் சந்திக்க வேண்டியவராகத் தள்ளப்பட்டார். தனக்கு ஏற்பட்ட பல துன்பங்களின் நடுவிலும் கடவுளின் திட்டத்தை புரிந்தவராய் செயல்பட்டார். இன்றைய திருமறை பாடத்தில் தாவீது சொல்லுகிறார். எனக்குத் துன்பம் விளைந்தது என் நன்மைக்காகவே, அதனால் உம் விதிமுறைகளை நான் கற்றுக் கொண்டேன்.

துன்பம் வந்தால்தான் இன்பத்தைப் புரிந்து கொள்ள முடியும். இப்போது சிறிது காலம் நீங்கள் பல்வகை சோதனைகளால் துயருற வேண்டியிருப்பினும், அந்நாளிலே பேருவகைக் கொள்வீர்கள். அழியக்கூடிய பொன் நெருப்பினால் புடமிடப்படுகிறது. அதைவிட விலையுயர்ந்த உங்கள் நம்பிக்கையும் மெய்ப்பிக்கப்படவே துயருறுகிறீர்கள் என்கிறார் பேதுரு *(1 பேது. 1 : 6, 7).*

யோசேப்பு சகோதரர்களால் துன்பப்படுத்தப்பட்ட போதும் கடவுளின் வழிகளை விடவில்லை. கடவுளை நன்மை செய்கிறவராகவே கண்டார். யோசேப்பு தன் சகோதரர்களைப் பார்த்து கூறியது, நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள். ஆனால் கடவுள் அதை இன்று நடப்பது போல், திரளான மக்களை உயிரோடு காக்கும் பொருட்டு நன்மையாக மாற்றிவிட்டார். யோசேப்பு, தாவீது போன்றோர் துன்பத்தை எதிர்கொண்டதால் கடவுளைப் புரிந்து கொண்டார்கள். கற்றுக்கொண்டார்கள். ஆகவே துன்பம் வந்தாலும் கடவுள் நம்பிக்கையுடன் வாழ்ந்து இறைவனில் கற்று கொள்வோம்.

2011

ஜுலை

14

**வியாழன்**

காலை

மத்.. 9:10–19

தி. வ.

மத். 9 : 13

**"ப–யையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்"**

மாலை

11சாமு. 5:1–10

சிந்தனை

**எதையும் அறிவுப் பூர்வமாக பார்.**

மன்னா சேர்ப்போம்

# கேள்விகளை தெளிவுப்படுத்துதல்

கேள்விகளும், பெற்றுக்கொள்கின்ற பதில்களும் மனித உள்ளங்களைத் தெளிவுபடுத்துபவை. தெளிவான மனதுடன் வாழ்பவன் இறையன்பை சுவைத்துப் பார்க்க முயற்சிக்கிறான். அது அவனை இறையாட்சிக்கு நேராய் வழிநடத்தும்.

மூன்றரை ஆண்டு காலம் இயேசு தன்னுடைய திருப்பணியைச் செய்தபோது பல்வேறு கேள்விக் கணைகளை, பரிசேயர்கள், சதுசேயர்கள், இயேசுவினிடத்தில் தொடுத்தனர். அவர்களுடைய கேள்விகளுக்கு, இயேசுவின் பதில்கள் பலவிதமாய் அமைந்தன. சில கேள்விகளுக்கு, கேள்வி கேட்டு பதிலளித்தார், சில கேள்விகளுக்கு மௌனமாயிருந்தார். அக்கேள்விகளில் ஒன்றுதான், உங்கள் போதகர் வரிதண்டுபவர்களோடும், பாவிகளோடும் சேர்ந்து உண்பது ஏன்? என்பது. இந்த கேள்வியை இயேசுநாதர் தெளிவுப்படுத்துகிறார். நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை, ப—யை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதன் கருத்தை நீங்கள் போய் கற்றுக் கொள்ளுங்கள்; ஏனெனில் நேர்மையாளரை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்" என்றார்.

ஒருமுறை அவர்கள் ராயருக்கு வரி செலுத்துவது முறையா? என கேட்டனர். அவர்களுடைய சூழ்ச்சியை அவர் தெளிவாக புரிந்து கொண்டு அவர்களிடம் ஒரு நாணயத்தை எனக்கு காட்டுங்கள், இதில் பொறிக்கப்பட்டுள்ள உருவமும் எழுத்தும் யாருடையவை? என்று கேட்டார் அவர்கள், ராயனுடையவை என்றார். அவர் அவர்களை நோக்கி அப்படியானால் ராயருக்குரியவற்றை ராயருக்கும், கடவுளுக்குரியவற்றை கடவுளுக்கும் கொடுங்கள் என்று சொன்னார். நாமும் சில தருணங்களில் குறிப்பாக மரண இழப்புகள் துன்பங்கள் வருகிற போது கேள்விகள் கேட்கிறோம். இக்கேள்விகளுக்கு பதில் தந்து நம்மைத் தெளிவுப்படுத்துவதுகிறவர் இறைவன் ஒருவரே என்ற இறைநம்பிக்கையோடு வாழுவோம்.

# கற்றதை செயல்படுத்துங்கள்

2011
ஜூலை
15
**வெள்ளி**

காலை
பி-. 4 : 9

தி. வ.
எரே. 31 : 31
**"...என்னிடத்தில் கற்றும் அடைந்தும் இருக்கிறவைகளெவைகளோ அவைகளையே செய்யுங்கள்"**

மாலை
ஏசா. 54:10–17

சிந்தனை
**கசடற கற்று நிற்க அதற்குத்தக.**

மன்னா சேர்ப்போம்

*கல்வி எந்நாளும் வாழ்விற்கு ஒளிதரும்*
*கல்லாமை நம்மை இருளிற்கு நடத்திடும்*
*கல்வி வரலாற்றில் இறைவனின் ஈகை*
*கருத்தாய் கற்றல் அனைவரின் கடமை*

*கல்வியை அருட்தொண்டார் மகிழ்ந்து ஊட்டினர்*
*காசின்றி நம்மவர் கல்வியை உண்டனர்*
*கல்வி இன்றைக்கு அங்காடியில் பேரமாம்*
*கல்விக்கு காசை வாங்கிக் குவிக்கிறார்*

*கல்வியின் உறைவிடம் சீடர்க்கு கற்பித்தார்*
*காலையும் மாலையும் களிப்புடன் கற்பித்தார்*
*கண்ணிய சீடர்கள் தெளிவுற கற்பித்தார்*
*கற்றதை செய—ல் காட்டுங்கள் என்றார்*

*பவுலார் கமா—யேல் பாதத்தில் கற்றார்*
*பாடுகள் அடைந்தவர் சப்தத்தால் கற்றார்*
*பயின்றதை வாழ்வில் செய—ல் காட்டினார்*
*பாரினில் மக்கள் கண்டிடக் காட்டுவோம்*

*உலகில் வாழும் மக்களில் பலருக்கு, சொல்லுக்கும் செயலுக்கும் இடையே உறவிருப்பதில்லை. போதகருக்கும் போதகத்திற்கு மிடையே உறவிருப்பதில்லை. எனவேதான் போதகரைப் பாராதே போதகத்தைக் கேள் என்கின்றனர். விசுவாசத்திற்கும் செயலுக்கும் (கிரியை) இடையே உறவில்லாதிருந்தால் விசுவாசம் செத்தது என்றார் யாக்கோபு (யாக். 2 : 17).*

*தூய பவுலடிகள், பி—ப்பியருக்கு எழுதும் திருக்கடிதத்தில் என்னிடம் கற்றுக் கொண்டவை, என் வழியாய் பெற்றுக் கொண்டவை என்னிடம் கேட்டறிந்தவை, என் வாழ்வில் நீங்கள் கண்டுணர்ந்தவை அனைத்தையும் கடைபிடியுங்கள் (பி—. 4 : 9) என்றார். மனசாட்சி வழியாயும், திருமறை வழியாயும், இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி வழி யாவும் நாம் கற்றுக் கொண்டவைகள் ஏராளம். ஆனால் கற்றவற்றை மூட்டைகட்டி வைத்து விட்டு, கற்காததை செயல்படுத்த விரும்புகிறோம். கற்காததைக் கற்றுக்கொடுக்க விரும்புகின்றோம். கை மண் அளவு கற்றுக் கொண்டதைச் செயல்படுத்தினதினாலே, நமக்கும் மகிழ்ச்சி சார்ந்தவர்களுக்கும் மகிழ்ச்சி. கற்றதில் நிலைத்திருந்து செயல்படுத்துவோம்.*

2011
ஜூலை
16
**சனி**

காலை
2தீமோ. 3:10–17

தி. வ.
2தீமோ. 3 : 14
**“நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு”**

மாலை
சங். 1

சிந்தனை
**கற்றுக் கொண்டதில் நிலைத்து நிற்பவனே உண்மைச் சீடன்.**

மன்னா சேர்ப்போம்

# கற்றுக் கொண்டதில் நிலைத்திருத்தல்

முக்கடலும் சங்கமித்து முத்தமிடும் இடமதினில்
முக்காலம் அழியாத சுரபியின் அருளியவர்
முப்பால் நூலீந்த வள்ளுவரைக் காண்கின்றோம்

அவர் “கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக” என்றார்

வள்ளுவனார் செய்தாயின் பவுலாரும் சொல்—யுள்ளார்
வாழ்வாங்கு வாழ்ந்திடவே வழியதனைச் சொல்—யுள்ளார்
வரலாற்றில் இவருரைகள் அழியாத மாணிக்கம்
வள்ளலார் உரைகட்காய் என்னாளும் நன்றிகள்

கற்றதிலே நிலைத்திருக்க இறைமகன் இயம்பினார்
கடினம் இதுவெனினும் நிலையுங்கள் இதிலென்றார்
களிப்பூட்டும் இம்மைக்கும் மறுமைக்கும் துணையென்றார்
காலத்தின் நெருக்கத்தால் சறுக்காதீர் என்றுரைத்தார்

எத்திக்கும் சோதனைகள் எல்லையில்லா வேதனைகள்
எவர் சொல்லும் இதயத்தின் வேதனையை போக்கான்
என்னாண்டவரே, என் கடவுளே என்பதுவே ஓலக்குரல்கள்
ஏகனின் பாதத்தில் விழுந்தாடுவோம் இந்நேரம்

இயேசுவின் பாதங்கள் துணைநிற்கும் நிலைத்திடுவீர்
இம்மையில் இதுவே அசைவில்லா ஆதாரம்
இரங்குவோர் காலடியில் காயங்கள் காணுவீர்
இறைமகனோ அசையார் அசைவின்றி காத்திடுவார்

கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திருக்கத்தான் மானுடம் விரும்புகின்றது. ஆனால் நிலைத்திருப்பதில் பல கடினப்பாடுகள் உள்ளன. பல்வேறு நெருக்கங்கள் நெருக்குகையில் மக்கள் தடம்புரண்டு போய் விடுகின்றனர்.

பவுலடிகள், உடன் இறைபணிக்கு தெரிவு செய்தவர்களில் தீமோத்தேயுவும் ஒருவர், தீமோத்தேயு இரண்டு கலாச்சார பின்னணிகளைச் சார்ந்தவர். இவரது தந்தை கிரேக்கர், தாய் யூதப் பெண், இந்த தாக்கங்களால் இவர் பாதிக்கப்படாவண்ணம் வாழ வேண்டும். இது ஓர் நெருக்கம்.



நெருக்கங்களில் நம்மை நேசிக்கும் இயேசு கிறிஸ்துவை நெருங்கி நிலைத்திருப்போம். இந்த நிலைத்திருத்தல் முடிவில்லாதது. நித்தியமானது. நித்தியத்திற்கு உரியவர்களாக்குவது நிலைத்திருப்போம்.

2011
ஜூலை
17
**ஞாயிறு**

காலை
கொலோ.3:12–17

தி. வ.
கொலோ. 3:13
**“...கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்”**

மாலை
சங். 146:1–10

சிந்தனை
**மன்னிப்பு மகிழ்வைத் தரும்**



# மன்னிப்பால் பகிர்வு

*மன்னிப்பைப் படிப்போம் இறையவர் இயேசுவில்*
*மண்ணில் இவரே மன்னிப்பின் மகுடம்*
*மக்கள் மண்ணில் உடைந்து திரிகிறார்*
*மக்களை இணைத்திட இவரே மன்னித்தார்*

*மன்னிப்பின் மாட்சியை மானுடத்திற்கு சொன்னவர்*
*மண்ணோர்க்கு இன்றும் மன்னிப்பை ஈகின்றார்*
*மண்ணில் மானுடம் மனதாலும் மன்னித்தால்*
*மகிமையின் அரசிற்கு அடித்தளம் இதுவென்றார்*

*மகிபரின் மன்னிப்பை சிலுவையில் காண்கின்றோம்*
*மண்டையில் அடித்தோரை மனதார மன்னித்தார்*
*மானுடம் வாழ்ந்திட சாவிலும் மன்னித்தார்*
*மங்காமல் உறவுகள் துளிர்த்திட மன்னித்தார்*

*மன்னிப்பு கிறிஸ்தவ தூண்களில் ஒன்றாம்*
*மன்னிப்பு மக்களின் மனங்கள் உலுக்கும்*
*மாண்புடன் திருந்திட இதுவே மருந்தாம்*
*மாசற்ற சமூகம் உருவாகும் இதனால்*

*மறையுள் யோசேப்பு மனதால் மன்னித்தார்.*
*மன்னிப்பும் ஏசாவும் சளைத்தவர் அல்லர்*
*மன்னிப்பை ஈந்திட தயங்குவார் பரருளர்*
*மனதின் இறுக்கமே இதற்கு காரணம்.*

*பாதிக்கப்பட்டவர், பாதிப்பை ஏற்படுத்தியவருக்கு மன்னிப்பை கொடுக்க ஆலோசனை கூறலாம். நாம் நமக்கு பாடுகள், பாதிப்பைத் தருகிறவர்களுக்கு மன்னிக்கிறோமா?* இயேசு கிறிஸ்து காரணமின்றி சிலுவையில் கொலை செய்தவர்களுக்கு, பிதா, மன்னிக்க பிதாவை நோக்கி மன்றாடினார் (லூக். 23 : 34) மன்னிப்பில்லையேல் மானுட உறவு நிலைக்காது. எனவே மன்னிப்பிற்காய் வேண்டினால் மன்னிக்க வேண்டுமென்று இயேசு *சொன்னார் (லூக். 17 : 4).*

*உலகில் நடைபெறுகின்ற அநீதிச் செயல்களுக்கெல்லாம் இறைவனை நோக்கி மானுடம் நீதிக்குரல் எழுப்பினால் (ஆதி. 4 : 10) இறைவன் நீதி செய்ய விரும்பினால் உலகம் நிலைக்காது. மன்னிப்பு குரலே, இறை நீதியால் வரும் தண்டனையை தடுக்கின்றது. வாழ்வு* தருகின்றது. நாமும் மற்றவர்களுக்கு மன்னிப்போம். *இறைவன் மன்னிக்க மன்றாடுவோம்.*

# அன்பினைப் பகிர்தல்

2011

ஜூலை

18

**திங்கள்**

காலை

யாக். 2:1–13

தி. வ.
யாக். 2 : 8

**“உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக...”**

மாலை

மீகா 6:6–8

சிந்தனை

**அன்பு அனைத்தையும் ஏற்றுக் கொள்ளும்.**

மன்னா சேர்ப்போம்

“அன்பு” என்பது அழகியதோர் சொல்
அன்பின் மாட்சிமை அறிந்தார் வள்ளுவர்
அன்பிற்கு இல்லை அடைக்குந்தாள் என்றார்
அவரின் வரிகள் அவரை உயர்த்தின

அன்புச் சொல்லை “அகப்பே” என்பர்
அகிலம் போற்றும் கிரேக்கச் சொல்லால்
அன்பின் முகங்கள் உலகில் காணலாம்
அதனுள் மூழ்கினால் ஆனந்தம் பெறலாம்

தன்னில் அன்பு காட்டுவோர் பலருளர்
தம்மவர் வட்டம் இதிலும் காட்டுவர்
தம்மவர் வட்டம் கடந்து காட்டினார்
தரணியர் போற்றும் இறைவர் ஒருவரே

தட்டித் தடுமாறி பாதையில் கிடக்கிறார்
தயவாய் தூக்கி உதவுவார் சொற்பம்
தன்னுள் வளர்த்தவர் வதங்கி நிற்கிறார்
தானாய் உதவுவார் மக்கள் சொற்பம்

அன்பின் முகடு அருளாளர் கிறிஸ்தவ
அன்பினால் உடலை உலகோர்க்கு கொடுத்தார்
அருளாளர் உதிரம் அதனையும் ஈந்தார்
அப்புறம் எதுதான் இருக்குமோ சிந்திப்போம்

சமூகமும் திருச்சபையும், ஆலயமும் ஒன்றுக்கொன்று நெருக்கமான உறவுடையவைகள் சமூகத்தின் ஏற்றத்தாழ்வு ஆலயத்துள்ளும் பிரதிப—க்கிறது. பொருள் செழுமையையும், பொருளாதாரச் செழுமையும் கடவுள் தருவது, தரித்திரமும், வியாதியும், பாடுகளும் கடவுள் உறவின்மையால் மக்கள் அனுபவிப்பது என்னும் சிந்தனைப் போங்கு மனித மனங்களில் விதைக்கப்படுகின்றது. பாடு அனுபவிப்பவர்களுடன், இயேசு கிறிஸ்து இல்லை என்னும் கருத்தமைவு, என்னும் நச்சுவிதைப் பலமாய் சமூகத்துள் திணிக்கப்படுகின்றது.

சமூக ஏற்றத்தாழ்வை, ஏழை, பணக்கார ஏற்றத்தாழ்வை, நியாயப்படுத்த, திருமறை வசனங்கள் வழி போதனைகள் கொடுக்கப்படுகின்றன. இந்த சூழலுக்குள் கிறிஸ்து தம்மை, நமக்குத் தந்து நம்மில் அன்பு கூர்ந்தது போல (எபே. 5 : 2) தரித்திரத்தி—ருப்போருக்கும் நம்மை ஈந்து அன்பு கூருவோம்.

# பகிர்வால் நிறைவு

2011
ஜூலை
19
**செவ்வாய்**

காலை
1இரா. 17:8–16

தி. வ.
1இரா. 17 : 16
**"...பானை யிலே மா செலவழிந்து போகவும் இல்லை, கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவும் இல்லை"**

மாலை
யோவா. 2:1–12

சிந்தனை
**இயலாமையிலும், இல்லாமையிலும் பகிர்தல் நிறைவைத் தரும்.**

உடமைகளும் உணவும் இருப்பது சிலரிடம்
உளமார இவர்கள் கொடுத்திட மறுக்கிறார்
உன்னதர் பகிர்ந்திட பாரோர்க்கு சொல்கிறார்
உள்ளோர்கள் இவர்க்கு துயரையே கொடுக்கிறார்

*வரலாற்றுப் பாதையில் வறண்டவர் பலருளர்*
*வாயால் வேதனை சொல்லுதல் கடினம்*
*வயிற்றைக் கட்டியே உலகில் வாழ்கிறார்*
*வயிராற உண்ணுதல் வரலாற்றில் கேள்வியே*

தீர்கர் சந்தித்தார் வரட்சியின் காலம்
தின்னிட உணவின்றி திர்க்கர் தவித்தார்
தீர்க்கர் எ—யா ஆற்றோரம் சென்றார்
தீர்ந்தது ஆற்றின் தண்ணீரும் ஒருநாள்

*விரைந்தார் எ—யா சாரிபாத்தூர் பக்கம்*
*விதவையார் ஒருவர் விறகு பொறுக்கினார்*
*விண்ணவர் அடியவர் உணவிற்காய் வினவினார்*
*வியத்தது விதவையார் உணவினை ஈந்தார்*

படைத்தவை அனைத்தையும் இறைவன் பகிர்ந்தார்
பாரில் மானுடம் மகிழ்வுறும் வாழ்விற்காய்
பட்சமும் பாதகமும் காட்டினார் அல்லர்
பாரில் நாமும் பகிர்வால் நிறைவோம்.

*பஞ்சம் மக்களைப் பாடுபடுத்தும், இடம் பெயர வைக்கும், இன்னல்களுக்குள்ளாக்கும் (ஆதி. 43 : 1). எ—யாவின் காலத்திலும் மக்கள் உணவு பஞ்சத்தால் பாதிக்கப்படுகையில் எ—யா கர்த்தரின் வார்த்தையின் படி சாரிபாத் ஊருக்கு அனுப்பப்பட்டார் (1 இரா. 17 : 9). ஓர் விதவையைச் சந்தித்தார். அவளிடம் எனக்கு ஒரு சிறிய அப்பம் சுட்டுக் கொண்டு வா" என்றார் (1 இரா. 17 : 13). அவன் அவருடைய வார்த்தையின்படியே தன்னிடத்தி—ருந்த கொஞ்சம் மாவிலும், எண்ணெயிலும் அப்பத்தை சுட்டுக் கொடுத்தார்.*

*விதவையின் இல்லாமையிலும் பகிரும் உள்ளம், பஞ்ச காலத்தில் இறைவன் இக்குடும்பத்தில் அதிசயம் செய்ய காரணமாயிருந்தது. மிகுந்த உபத்திரவத்திலும், கொடிய தரித்திரத்திலும், மக்கதொனிய மக்களின் கொடையுள்ளம், பவுலடிகள் அவர்களை புகழுவதற்கு காரணமானது (II கொரி. 8:1—3). தரித்திரம் நமக்கிருந்தாலும் இருப்பதில் இல்லாதவர்களுக்கு கொடுப்போம். இன்பம் அடைவோம்.*

# பகிர்வால் மகிழ்வு

2011

ஜூலை

20

**புதன்**

காலை

அப். 2:42–47

தி. வ.

அப். 2 : 44

**“விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்”**

மாலை

சங். 34

சிந்தனை

**நிறைவோடு பகிர்ந்து மகிழ்வோடு வாழ்வோம்.**

*அதிசயம் இதனால் மானுடம் மகிழும்*
*அதிசயம் அனைவரும் ஆவலாய் விரும்புவர்*
*அதிசயம் வரலாற்றில் இறைவன் தொடர்கிறார்*
*அதிசயம் நாமம் இவர்க்கே உளத்தாம்*
*அதிசயம் ஐம்பதாம் நாளில் காண்கிறோம்*
*அதிசயம் உலகில் ஆவியார் நிறைவால்*
*அதிசயம் அதிசயம் அசைத்ததால் அதிசயம்*
*அதிசயம் கண்டார் அகிலத்தின் மாந்தர்*
*அதிசயம் உடைத்தது மானுட உள்ளங்கள்*
*அதிசயம் தூண்டியது சிந்திக்க எவரையும்*
*அதிசயம் செய்தது அறிந்திட அனைத்தும்*
*அதிசயம் செய்தது அர்ப்பணிக்க அனைவரையும்*
*அதிசயம் தந்தது புதியதோர் சமூகம்*
*அதிசயம் தந்தது கொடுக்கும் உள்ளம்*
*அதிசயம் தந்தது சமத்துவ சமூகம்*
*அதிசயம் இதனை இறையரசில் காண்போம்*

*இறைவனின் படைப்புகள் மனிதர்களுக்கு தரப்பட்டுள்ளன. மனிதர்களின் போட்டிகளால், படைப்பு அனைவருக்கும் சீராய் கிடைக்கவில்லை. சிலர் அதிகமாக எடுத்துள்ளனர். சிலர் இல்லாமலே வாழ்கின்றனர். இந்த ஏற்றத்தாழ்வுள்ள சமூக அமைப்பு பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாய் வரலாற்றில் தொடருகின்றது. ஏற்றத்தாழ்வுள்ள சமூக அமைப்பை, படிநிலைச் சமூக அமைப்பாக மாற்றி, சமத்துவ சமூகம் அமைக்க இறைவன் விரும்புகின்றார். இறைவனின் விருப்பை முழுக்குநர் யோவான் பள்ளங்களெல்லாம் நிரப்பப்படும் சகல மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படும், கோணலானவைகள் செவ்வையாகும் கரடானவைகள் சமமாகும் என்றார் (லூக். 3 : 4).*

*பெந்தேகோஸ்தே நாளில் தூயாவியரால் ஆட்கொள்ளப்பட்ட சமூகம், பகிரும் சமூகமாய், உள்ளவர்கள் இல்லாதவர்களுக்கு பகிர்ந்து கொடுத்து (அப். 2 : 45) ஓர் சமத்துவ சமூகமாய் மாறியது. இனம், மொழி, நிறம் இவற்றால், வேறுபட்டிருந்த இவர்கள் உள்ளத்தால் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று சொல்ல முடியாத சமத்துவ சமூகமாயிருந்தனர் தூயாவியார், பகிரத்தூண்டியதன் விளைவு பகிர்வால் உண்டான மகிழ்வுறும் சமூகம், இந்த மகிழும் சமூகம் உலகில் படைக்கப்பட முயற்சிப்போம். இது இறைவனின் இலட்சிய உலகம் என்பதை உணர்வோம்.*

# இருப்பதை பகிர்தல்

2011
ஜூலை
21
**வியாழன்**

காலை
மாற். 8:1–10

தி. வ.
மாற். 8 : 2
**“ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன்”**

மாலை
II சாமு. 7:1–10

சிந்தனை
**இருப்பதைக் கொடுத்தால் இன்பத்தை பெறலாம்**



*இறைவனின் படைப்பில் உள்ளன உணவுகள்*
*இறையவர் இதனை மனுவுக்காய் படைத்தார்*
*இம்மையில் உணவின்மை இறைவனை உறுத்தும்*
*இதனால் இறைவன் துயரம் கொள்கிறார்*
*இயேசுவோ இறைவனின் அரசினைப் போதித்தார்*
*இறைவனின் அரசிற்காய் மக்களைக் கூட்டினார்*
*இயங்கிடும் மக்கள் உணவின்மைக் கண்டார்*
*இரங்கும் இதயத்தார் இதற்காய் நொந்தார்*
*சீடர்க்கு தன்துயர் தெளிவாய் சொன்னார்*
*சீடரின் தீர்வோ மக்கட்கு துயராம்*
*சீக்கிரம் உணவை பாருங்கள் என்றார்*
*சீக்கிரம் பார்க்கையில் அப்பங்கள் கண்டனர்*
*சிறுமீன் சிலவும் அவரிடம் கொடுத்தனர்*
*சிந்தையை கடந்தவர் இதனால் மகிழ்ந்தார்*
*சீராய் பகிர்ந்திட சீடர்க்கு பணித்தார்*
*சிரமேல் ஏற்றுப் பகிர்ந்தனர் சீடர்கள்*
*பசுமைத் தரையில் பசியுள்ள மக்கள்*
*பந்தியில் அமர்ந்தனர் பரமனின் முன்னால்*
*பக்தியர் பெற்றனர் விருந்துண்ணும் பாக்யம்*
*படைத்தவர் உள்ளம் உணர்ந்து போற்றினர்.*

*இயேசுகிறிஸ்துவின் திருப்பணிக் காலத்தில் விடுதலை வேண்டி மக்கள் கூட்டமும், விண்ணரசு செய்தி வேண்டி மக்கள் கூட்டமும் அவரை நெருக்கிச் சென்று கொண்டிருந்தது. மக்கள் பசியோடிருப்பதைக் கண்டு இயேசு பரிதபித்தார். தன்னைத் தேடி வந்த மக்களின் பசியாற்ற மனுமகன் துடித்தார். மக்களுக்கு உணவு கொடுக்க சீடர்கள் கேட்டபோது, சீடர்களால் இப்பெருங்கூட்டத்திற்கு உணவிட முடியாது என்னும் முடிவோடிருந்தனர்.*

*இயேசு இருப்பதை கொண்டுவரச் சொன்னபோது ஏழு அப்பங்களையும் சிலசிறு மீன்களையும் இயேசுவிடம் கொடுத்தனர். இயேசு ஆசீர்வதித்து கொடுத்தார். சுமார் 4000 பேர் சாப்பிட்டனர். மீதியான துணிக்கைகளை 7 கூடை நிறைய எடுத்தனர் (மாற். 7 : 8). இருப்பதைப் பகிரும் மனம் இருந்தால், அசாதாரணமான செயல்களை இயேசு கிறிஸ்து செய்வார். நம்மிடம் இருப்பதை இயேசுவிடம் கொடுத்தால். பரிதாபப்படும் பட்டினிச் சமூகம் மறைந்து, பாரில் மகிழ்வான சமூகத்தைக் காணலாம்.*

2011

ஜூலை

22

**வெள்ளி**

காலை

அப். 6:1–7

தி. வ.

அப். 6 : 4

**"நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்"**

மாலை

யாத். 18:13–23

சிந்தனை

**இறைவனின் பணிவிடை பசி தீர்க்கும் அருட்கொடை**



# பணிவிடையில் பகிர்வு

*மானுட உருவில் இறையவர் வாழ்ந்தார்*
*மங்கின மானுடம் மகிழ்ந்திடத் துடித்தார்*
*மகிழ்விக்க பண்முகப் பணிகளைச் செய்தார்*
*மானுட மகிழ்வில் இதயம் மகிழ்ந்தார்*
*மனுமகன் சீடரும் இதையேத் தொடர்ந்தனர்*
*மக்கட்கு ஆசிகள் இவர்கள் வழங்கினர்*
*மாட்சிமை அரசினை இலக்காய் போதித்தார்*
*மக்கள் தேவையில் உணவும் ஒன்றாம்*
*மக்கள் பிரச்சனை இதனில் எழுப்பினர்*
*மனதுள் வேதனை சீடர்கள் கொண்டனர்*
*மாயமாய் சிக்கலை ஆக்கிடத் துணிந்தனர்*
*மனுமகன் உறவுடன் இதற்காய் முயற்சித்தார்*
*முயன்றார் தீர்வுக்கு முன்னவர் உதவினார்*
*முறுமுறுப்பின் முடிவுக்கு வழியினை நல்கினார்*
*அழைத்தனர் ஏழ்வரை அவையின் முன்னால்*
*ஆன்றோர் சபையில் நற்சாட்சி பெற்றவர்*
*அர்ப்பணம் செய்தனர் அடியவர் ஏழ்வரும்*
*அவர்களே தீர்த்தனர் பிரச்சனை எல்லாம்*
*அற்புதர் இயேசுவின் அடியவர் எல்லாம்*
*அருளாளர் பணியராய் மன்றாடிப் போதித்தார்.*

இறைவனின் பணிவிடை பல முகங்களைக் கொண்டது. இதன் ஒருமுகம் பசி நீக்குதலாகும். திருச்சபை இத்திருப்பணியை செய்ய வேண்டுமென்று இறைவன் விரும்புகிறார். மல்கியா இறைவாக்கினர் இதை சொல்லுகையில் *என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசம பாகங்களையெல்லாம் பண்டகசாலையிலே கொண்டு வாருங்கள் என்கின்றார் (மல். 3 : 10).*

முதலாம் நூற்றாண்டு திருச்சபை, மக்களுக்கு உணவிட்டது. கிரேக்க விதவைகள் சிறப்பாய் கவனிக்கப்படவில்லை என்னும் பிரச்சனை வந்தது. இதை நிவிர்த்தி செய்வதற்காக பரிசுத்தாவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றிருந்த ஏழுபேரை தெரிவு செய்தார்கள் *(அப். 6 : 3).* இவர்களிடம் உணவு பகிரும் பொறுப்பைக் கொடுத்தனர். அப்போஸ்தலர்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிப்பதிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். பணிவிடைப் பகிர்வு, செம்மையாய் பணி செய்ய உதவும் பணிகளை பகிர்ந்து கொடுத்து, மகிழ்வுடன் வாழ்வோம்.

2011

ஜூலை

23

**சனி**

காலை

ஏசா. 58:7

தி. வ.

ஏசா. 58:1–14

**"பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், ... எனக்கு உகந்த உபவாசம்"**

மாலை

மத். 6:25–34

சிந்தனை

**உண்மையான உபவாசம் இனியதோர் அனுபவம்.**



# உண்மை உபவாசம்

*சமயத்தின் போதனைக்கும் உபவாசம் ஒன்றாகும்*
*சமயத்தின் இலக்கியங்கள் இதனைச் சுட்டும்*
*சமயத்தில் வலுவானோர் உபவாசம் ஏற்றார்*
*சமயத்தின் சாத்திரங்கள் இதற்கு சான்றாகும்*

*உபவாசம் உடலுக்கு உரமூட்டும் என்பர்*
*உபவாசம் உபாதையை நசுக்கிவிடும் என்பர்*
*உபவாசம் பக்திக்கு வலுவூட்டும் என்பர்*
*உபவாசம் இறையுறவை வலுப்படுத்தும் என்பர்*

*உபவாசம் தனித்து இருப்போரும் உள்ளர்*
*உபவாசம் குழுவாய் இருப்போரும் உள்ளர்*
*உபவாசம் இறைவனை ஈர்ப்பதற்காய் என்பர்*
*உபவாசம் இறையருளை பெறுவதற்காய் என்பர்*

*உபவாசம் உதவணும் ஊனர்க்கு என்பர்*
*உபவாசம் கட்டுகளை அறுக்கணும் என்பர்*
*உபவாசம் நுகச்சுமையை முறிக்கணும் என்பர்*
*உபவாசம் உணர்வுகளை அறியணும் என்பர்*

*இயேசுவும் பாலையில் உபவாசம் இருந்தார்*
*இங்கே தூதர்கள் பணிவிடை செய்தனர்*
*இறைமகன் காட்டு விலங்குடன் வாழ்ந்தார்*
*இறையவர் உபவாசம் இனியதோர் அனுபவம்*

*ஓய்வுநாள் காலை ஆராதனையில் சிறப்பு விருந்தினர் ஒருவர் அருளுரையாற்றினார். தான் 41 நாட்கள் உபவாசமிருந்ததாயும், இதன் மூலம் பேய்கள் துரத்தும் வரத்தைப் பெற்றுக் கொண்டதாயும், பேய்கள் துரத்தி கிடைத்த வருமானத்தின் மூலம் சொகுசு கார் வைத்திருப்பதாயும் குறிப்பிட்டார்.*

*"உபவாசம்" ஆதாயம் தேடுவதற்குரிய அருட்கொடைகளைப் பெறுவதற்குரியதாய் சிலர் கருதுகின்றனர். சிலர் உபவாசம் இறைவனின் கடின இதயத்தை கரைய வைக்கும் மருந்து என கருதுகின்றனர். இயேசு கிறிஸ்து தலைக்கு எண்ணெய் பூசி, முகத்தைக் கழுவி, முக வாடலாயிராமல் உபவாசியுங்கள் என்றார். மேலும் மனுஷருக்கு காணப்படாமல் அந்தரங்கத்தில் இருக்கிற பிதாவை நோக்கி உபவாசிக்க கூறினார் (மத். 6 : 16, 17). ஏசாயா கூறும் உண்மையான உபவாசம் கட்டப்பட்டவர்களின் கட்டுகளை அவிழ்த்து, இல்லாதவர்களுக்குக் கொடுத்தல் என்பதே இறையவர் சொல்லும் உண்மை உபவாசம் செய்வோம், இழப்பிலும் இன்பம் வரும் மறவாதிருப்போம்.*

2011

ஜூலை

24

**ஞாயிறு**

காலை

1இரா. 17:17–24

தி. வ.

1இரா. 17 : 22

**"கர்த்தர் எ–யாவின் சத்தத்தைக் கேட்டார்"**

மாலை

யோவா.11:38–44

சிந்தனை

**நம்பிக்கையுள்ள மன்றாட்டில் அற்புதம் காணலாம்.**

மன்னா சேர்ப்போம்

# எலியா செய்த அற்புதம்

*விவி—யம் விண்ணவர் செய்தியை ஈயும்
வியத்தகு சப்தங்கள் இதனுள் தொனிக்கும்
விண்ணவர் நூலுன் இஸ்மவேல் அழுகிறார்
வியத்தகு பதம் ஈசனே ஈந்தார்*

*அழுகிறார் தீர்க்கன் இறைவனின் வாயாய்
அழுதிடும் தீர்க்கர் அற்புதம் கண்டார்
அகத்துள் நொந்தவர் எ—யா தீர்க்கர்
அற்புதம் இவரும் குழந்தையுன் செய்தார்*

*தீர்க்கரின் அற்புதம் ஏழையின் வீட்டில்
தீர்க்கரின் அற்புதம் விதவையின் வீட்டில்
தீர்க்கரின் அற்புதம் அழுதவர் வீட்டில்
தீர்க்கரின் அற்புதம் ஏற்றவர் வீட்டில்*

*பாடுகள் பாதையில் எ—யா தீர்க்கர்
பாசமாய் இவரால் நேசிக்கப்பட்டார்
பட்சணம் ஈந்து அன்பினைக் காட்டினார்
பாடுகள் வேளியில் பணிந்துமே சொன்னார்*

*பக்தன் எ—யா பரமனின் பாதத்தில்
பாசமாய் பிள்ளையின் உயிருக்காய் வேண்டினார்
பார்த்தவர் பரமனும் இரக்கமாய் இரங்கினார்
பச்சிளம் பிள்ளை பிளைத்திடச் செய்தார்*

எ—யா தீர்க்கர் மக்களுடைய நெஞ்சங்களை கடவுளிடம் திருப்பும் அரும்பணி செய்தார். அத்துடன் அன்னிய தெய்வ வழிபாட்டால் சமூகத்தில் வந்த தீமைகளைச் சுட்டிக்காட்டினார்.

எ—யா வற்றிப்போகும் கேரீத் ஆற்றுத் தண்ணீரைக் குடித்து காகம் கொடுத்த உணவையும் உண்டு ஒளிந்து வாழ்ந்தார். பஞ்சம் தொடர்ந்ததால் சாரிபாத்து ஊருக்கு சென்று ஒரு விதவையின் வீட்டில் தங்கியிருந்தார் *(1 இரா. 17 : 9)*. ஒருநாள் விதவையின் மகன் மரித்துப் போனான். விதவை, *தேவனுடைய மனுஷனே, எனக்கும் உமக்குமென்ன? என் அக்கிரமத்தை நினைக்கப்பண்ணவும் என் குமாரனை சாகப்பண்ணவுமா என்னிடத்தில் வந்தீர் என்றாள் (1 இரா. 17 : 18)*. வேதனைச் சொற்களைக் கேட்ட எ—யா பிள்ளையின் ஆத்துமா திரும்பி பிள்ளையிடம் வரக் கடவுளை மன்றாடினார். அவன் பிளைத்தான். அன்பு காட்டியவர் வேதனைப்படுத்தும் வார்த்தைகளைப் பேசலாம். ஆனால் நமது வேண்டுதல்கள் அவர்களுக்கு புதுவாழ்வு தரும்.

2011
ஜூலை
25
**திங்கள்**

காலை
ஆதி. 18:16–33

தி. வ.
ஆதி. 18 : 22
**"...ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான்"**

மாலை
யோ. 17:20–26

சிந்தனை
**மன்றாட்டின் மறுபக்கம் மக்களின் மீட்பு வாழ்வு**

மன்னா சேர்ப்போம்

# மக்களுக்காய் மன்றாடிய ஆபிரகாம்

*மன்றாடுதல் மனதின் பாரத்தைக் குறைக்கும்*
*மகிழ்ந்திட இதுவே மனதிற்கு மருந்தாம்*
*மாட்சிமிகு இறைவனும் இதனை விரும்புவார்*
*மகனாம் கிறிஸ்துவும் மன்றாடியே வாழ்ந்தார்*

*தனக்காய் மன்றாடுவோர் தரணியில் பலருளர்*
*தன்னலம் பலரின் வேண்டல் வெளிப்படும்*
*தரணிக்காய் ஜெபிப்போர் தரணியில் சிலருளர்*
*தாரகம் இவரைப் புகழ்ந்துமே போற்றுவார்*

*முழுமுதல் தலைவரில் ஆபிரகாம் மூத்தவர்*
*குவலயம் அறியும் இவரின் விசுவாசம்*
*குன்றாய் நிற்கிறார் வரலாற்றில் இணைந்தோராய்*
*குளிந்த இதயத்தார் குறைவில்லா நெஞ்சத்தார்*

*அற்பர்கள் பாவத்தை அவனியில் செய்கிறார்*
*ஆண்டவர் இவரில் எரிச்சல் கொள்கிறார்*
*அற்பர்கள் பாவத்தால் அவனியில் நாசம்*
*ஆபிரகாம் மீட்பிற்காய் ஆண்டவரை வேண்டினார்*

*அழிவிற்கு காரணம் பாவமே என்போம்*
*அற்பரின் இதயமே இதற்குக் காரணம்*
*ஆண்டவர் அன்புள்ளம் இதனை அறிவோம்*
*ஆண்டவர் திருவடி மன்றாடி நிற்போம்*

*"சோதோம்" என்பதற்கு எரிகின்ற, அழிகின்ற என்னும் பொருளுண்டு யோர்தான் சாக்கடல் ஒட்டிய நகரம். இது ஆண்டவரின் தோட்டத்தைப்போலும், எகிப்து நாட்டைப் போலுமிருந்தது. லோத்து சோதோமுக்கு அருகில் கூடாரம் அமைத்து வாழ்ந்தார் சோதோம் மக்களின் கொடிய பாவத்தால் பட்டணம் அழியும் நிலையிருந்தது. இச்சமயம் ஆபிரகாம் கடவுளின் மக்களின் மீட்புக்காய் மன்றாடினார் (ஆதி. 18 : 23). ஒருமுறையல்ல பலமுறை மன்றாடினார்.*

*இஸ்ரவேல் மக்கள் கானான் பயணப் பாதையில், தங்களை மீட்டு வழிநடத்தி வரும் கடவுளை விட்டு விலகிச் சென்றனர். கடவுள் மக்களிடம் கோபங்கொண்டு, இவர்கள் வணங்கா கழுத்துள்ள மக்கள், நான் இவர்களை அழித்துப் போடுவேன் என்றார். மோசேயோ, கடவுளிடம் இம்மக்களின் மன்னிப்புக்காய் மன்றாடினார் (யாத். 32 : 13). நாமும் அழிவுக்குரிய மக்களின் மீட்புக்காக மன்றாட அர்ப்பணிப்போம்.*

2011

ஜூலை

26

**செவ்வாய்**

காலை

யோனா 3:1–10

தி. வ.
யோனா 3 : 5

**"அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ் செய்யும்படிக் கூறினார்கள்"**

மாலை

லூக். 23:26–31

சிந்தனை

**அழிவின் மக்கள் அழியாமை பெற இரங்கும் இறைவன்.**



# பட்டணத்துக்காக பரிந்து வேண்டிய மக்கள்

"பாபேல்" என்றால் [illegible]ரும் அறிவர்
பட்டணம் சிதைவதை இங்கே காண்கிறோம்
பாரில் பட்டணம் மக்களின் மோகம்
பட்டணம் உரிமைக்காய் பாரில் துடிக்கிறார்

பாரில் தாவீது பட்டணம் கட்டினார்
பலரின் உயிர்களை இங்கே மாய்த்தார்
பட்டணம் அதனில் ஆலயம் கட்டினார்
பாரில் இதனை மக்கள் அழித்தனர்

ஒருபுறம் பட்டணம் வளர்ச்சியின் துணையிடம்
மறுபுறம் பட்டணம் பாவத்தின் புறப்பிடம்
ஒருபுறம் பட்டணம் அழகின் சிகரம்
மறுபுறம் பட்டணம் அவலத்தின் சிகரம்

நினிவே பட்டணம் இறைவனின் பட்டணம்
நித்தியர் இதனிடம் கண்களை வைத்தார்
நீதி அழிவில் வேதனை கண்டார்
நித்தியர் செய்திக்காய் யோனாவை அனுப்பினார்

யோனாவின் செய்தியால் மக்கள் திரும்பினர்
யோசனை செய்தனர் தங்கள் தவறுகள்
யோக்கியர் அல்லர் என்பதை உணர்ந்தனர்
யோக்கியர் திருவடி பணிந்து கெஞ்சினர்

"நினிவே" அசீரிய நாட்டினுடைய தலைநகர். இப்பட்டணம் அக்கிரமம் ம—ந்தப் பட்டணமாயிருந்தது (யோனா 1 : 1). கடவுள் மக்களின் பாவத்தைச் சுட்டிக் காட்டி எச்சரிக்கும்படி யோனாவை அனுப்பினார். யோனா அங்கு சென்று இன்னும் நாற்பது நாளுண்டு அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினார் (யோனா 3 : 4). யோனாவின் செய்திக் கேட்ட மக்கள். கடவுளை விசுவாசித்து இரட்டுடுத்தி உண்ணாம—ருந்து தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினார்கள். நினிவேயின் மன்னனும் இரட்டுடுத்தி சாம்ப—ல் உட்கார்ந்தான். இறைவன் மக்களின் நிலையினைக் கண்டு மனஸ்தாபப்பட்டார். அழிவி—ருந்து நினிவே பட்டணம் மீட்கப்பட்டது. பட்டணத்து மக்களும் பரமனின் மக்கள். இவர்களும் மகிழ்வுடன் வாழ தவறுகளி—ருந்தாலும் இறைவன் தயவு காட்ட கடவுளை மன்றாடுவோம்.

2011

ஜூலை

27

**புதன்**

காலை

எஸ். 7:1–10

தி. வ.

எஸ். 7 : 3

**“ . . . என் வேண்டுதலுக்கு என் ஜீவனும், என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் எனக்கு கட்டளையிடப்படுவதாக”**

மாலை

அப். 5:12–16

சிந்தனை

**அனைவருக்கும் விடுதலை அவனியில் மலரட்டும்.**

மன்னா சேர்ப்போம்

# விடுதலைப் பணியில் எஸ்தர்

விடுதலை வரலாறு இறைவனின் வரலாறு
விடுதலைப் பிறவியாய் மானுடம் படைத்தார்
விடுதலைச் சுகத்தினை மானுடர் சிதைத்தார்
விண்ணவர் இதற்காய் நொந்து அழுதார்

விடுதலை வரலாற்றுள் ஆண்கள் உள்ளனர்
விடுதலை வரலாற்றில் பெண்டிர் உள்ளனர்
விடுதலை வரலாற்றுள் இறைவாக்கினர் உள்ளனர்
விடுதலை வரலாற்றுள் இறைமக்கள் உள்ளனர்

அடிமையின் விடுதலை இறைவனின் ஏக்கம்
அதற்காய் எதையும் செய்திடத் துணிந்தார்
அற்புதர் இறைவன் மனுவுருவு ஆகுதல்
அகிலத்தால் விடுதலைத் தாகத்தின் தியாகம்

விஞ்சிடும் கொடுமை ஆமானின் காலம்
விம்மியே அழுதனர் யூதர்கள் அனைவரும்
விடுதலை தாரகை எஸ்தரும் அழுதார்
விடுதலை வேண்டி அகாஸ்வேருவை முறையிட்டார்

ஏறாம் அகாஸ்வேருவால் விடுதலை வந்தது
ஏங்கும் உள்ளத்தால் தியாகத்தின் பயனிது
ஏகனின் உறவும் இவருடன் இருந்தது
ஏக்கம் தீர்ந்தது விடுதலை செயலால்

கடவுள் இஸ்ரவேலரை எகிப்து தேசத்தி—ருந்து மீட்டு வந்தார். இறைவனின் விடுதலைப் பணியில் ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் பயன்படுத்தப் பட்டுள்ளார்கள். பெண்களுள் உயர்ந்து நிற்கும் பெண்ணாக அரசி எஸ்தரை அறிகிறோம். இவர் தாய் தகப்பனின்றி, சகோதரர் மொர்தேகாயின் மகளாக வளர்க்கப்பட்டவர் (எஸ். 2 : 7). ஆமான் என்னும் கொடியவன், அகாஸ்வேரு மன்னன் மூலம் அகாஸ்வேருவின் நாட்டிற்குட்பட்ட அனைத்து யூதர்களையும் கொல்ல திட்டமிட்டான் (எஸ். 3 : 12). இதையறிந்த மொர்தேகாய் எஸ்தருக்கு இதை அறிவித்தார். எஸ்தரும், சூசான்நகர் யூத மக்களும் விடுதலைக்காக கடவுளின் சமூகத்தில் உபவாசம் பண்ணினார்கள் (எஸ். 4 : 16). தன் மக்களின் விடுதலைக்காக “நான் செத்தாலும் சாகிறேன்” என்ற துணிச்சலுடன் மன்னரிடம் விடுதலைக்காய் மன்றாடினார். யூதர்கள் காப்பாற்றப்பட்டனர். அடிமைச் சமூகம் மீட்புபெற துணிந்து செயல்படுவோம் நாமும்.

# கைம்பெண்ணுக்கு உதவிய எலிசா

2011
ஜூலை
28
**வியாழன்**

காலை
2இரா. 4:1–7

தி. வ.
2இரா. 4 : 7
**"நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனம் பண்ணுங்கள்"**

மாலை
லூக். 9:10–17

சிந்தனை
**அர்த்தமுள்ள ஆலோசனை விடுதலை அளிக்கும் விருந்தாகும்.**

பெண்கள் உலகில் இரண்டாம் தரமென்பர்
பெண்கள் உலகில் ஆணின் பொருளென்பர்
பெண்கள் உலகில் அடங்கிடல் வேண்டுமென்பர்
பெண்கள் உலகில் பாவத்திற்கு காரணமென்பர்

கைம்பெண்கள் நிலையோ கவலையிலும் கவலை
கையறம் பாலுக்கு தகுதியோர் இவர்கள்
கைவளை அணிந்திட மறுத்தனர் சமூகம்
கைணிகள் மங்களத்தில் முன்நிற்க மறுத்தனர்

கலையாய் கூந்தலை பின்னுதல் தடுத்தனர்
காணத் துவையல் உண்டிடக் கொடுத்தனர்
காடாம் தரையில் பகுத்திட வைத்தனர்
கசந்தனர் வாழ்க்கையில் வாழ்நாள் முழுவதும்

கருணைக் கணவர் மரித்துப்போனார்
கடனால் நொந்தாள் தீர்க்கர் மனைவி
கனதி நெஞ்சுடன் எ—சா முன்னின்றார்
காரியம் அறிந்தார் எ—சா தீர்க்கர்

கசந்தார் மகிழ்ந்திட வழியதை சொன்னார்
கற்பன் நம்மால் செய்திடல் அரிதாம்
கடவுளின் அருளால் கடனைத் தீர்த்தாள்
களிப்புடன் வாழ்ந்தே இறைவனில் மகிழ்ந்தார்

எ—சா இறைவாக்கினர் கி.மு. 9—ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். வடநாட்டு இறைவாக்கினர். விவசாயி சமூகத்தை சார்ந்தவர் (1 இரா. 19 : 19). இவர் எ—யாவின் சீடனாயிருந்தவர். இறைவாக்கினர் சமூகத்தை சார்ந்த ஒரு இறைவாக்கினர் இறந்து போனார். இவரது கடனால், இவரது மரணத்திற்கு பின்னால் குடும்பத்தவர் பாதிக்கப்பட்டனர். தீர்க்கருக்கு கடனீந்தவர் தீர்க்கரின் இரண்டு குமாரர்களையும் அடிமைகள் ஆக்கிக் கொள்ள வந்தான் (2 இரா. 4 : 1). நொந்துபோனாள் தீர்க்கரின் மனைவி. தன் வேதனையை, எ—சா தீர்க்கருக்குத் தெரிவித்தார். எ—சா கலங்கினார். இக்கட்டான சூழ—ல் இக்குடும்பத்திற்கு உதவ முன்வந்தார். கைம்பெண் கடன் தீர்ப்பதற்கு ஆலோசனை வழங்கினார். இவரது ஆலோசனையின்படி கைம்பெண்ணும், பிள்ளைகளும் நடந்துகொண்டார்கள் (2 இரா. 4 : 4). அதிசயம் இவர்களின் இல்லத்துள்ளே நடந்தது. பிறர் வாழ்வு மகிழும் ஆலோசகர்களாவோம்.

2011

ஜூலை

29

**வெள்ளி**

காலை

1சாமு. 3:1–18

தி. வ.

1சாமு. 3 : 10

**"...சாமுவேல் சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்றான்."**

மாலை

மத். 10:1–15

சிந்தனை

**ஆண்டவரின் அகவேதனை அவர் அழைப்பில் அரங்கேறும்**

மன்னா சேர்ப்போம்

# அழைப்பு பெற்ற சாமுவேல்

சமூகம் என்பது சாலவும் சிறந்தது
சாமானியர் பலர் இதனுள் வாழ்வர்
சாத்திர மேதானி மக்களும் வாழ்வர்
சமூகத்துள் சமயம் மறந்திடல் அரிதாம்

சமயத்தைக் காட்டும் புனித இடங்கள்
சண்டையும் சச்சரவும் இங்கே அதிகம்
சமயத்தார் சீலோவுக்கு சீராய் சென்றனர்
சங்கடம் அன்னாளும் எல்கானாவும் சென்றனர்

குழந்தையில்லாத அன்னாள் அழுதாள்
குறிப்பாய் ஆசாரியர் அறிந்திட அழுதார்
குழந்தைக்காய் அழுதவள் காரியம் சொன்னாள்
குலமகன் ஏ—யோ அவளை வாழ்த்தினார்

குழந்தையை பெற்றாள் குலமகள் அன்னாள்
குழந்தையை அழைத்தார் குறைவில்லா இறைவன்
குழந்தையை அழைத்தவர் வரலாற்றைத் தொடர்கிறார்
குதுகலம் அடைவோர் இறையவர் அழைப்பாய்

இறையவர் இன்றும் பெயருடன் அழைக்கிறார்
இறையவர் அழைப்போ இதமீயும் இதையத்துள்
இன்புறல் வேண்டின் அவர்சப்தம் கேட்போம்
இனிமேல் காலம் தாழ்த்துதல் வேண்டாம்.

இறைவன் தன் இதய வேதனையை பகிர்ந்து கொள்ள மானுடத்தை தேடுகின்றார். சீலோவிலே ஆசாரியராயிருந்த ஏ—யின் மக்களின் பாவம் கடவுளின் சமூகத்தில் மிகவும் கொடியதாயிருந்தது (1 சாமு. 2 : 19). ஏ—யும் கடவுளைப் பார்க்கிலும் அவன் குமாரர்களை மதித்தான்.

வேதனையுற்ற இறைவன், ஆலயத்தில் படுத்திருந்த சாமுவேலைப் பெயர் சொல்—, அழைத்தார். சாமுவேல் கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன் என்றார் (1 சாமு. 3 : 10). கடவுள் சாமுவே—டம் "ஏ—யின் குமாரன் தங்கள் மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும் அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம் அவன் குடும்பத்திற்கு என்றும் நீங்காத நியாயத் தீப்பு செய்வேன்" என்றார் (1 சாமு. 3 : 14). இறைவன் சிறுவன் சாமுவே—டம் தன் அகவேதனையை பகிர்ந்து கொண்டார். அவர் அழைப்பை ஏற்போம் அகமகிழ்வோம்.

# ஆற்றல் பெற்ற மோசே

2011
ஜூலை
30
**சனி**

காலை
யாத். 4:1–17

தி. வ.
யாத். 4 : 12
**"நீ போ; நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன்"**

மாலை
மத். 14:22–33

சிந்தனை
**இறை அருளை பெற்றால் ஆற்றலுள்ளோராய் வாழலாம்.**

இஸ்ரவேலர் வரலாற்றுள் மோசே நிற்கிறார்
இயங்கும் இறைவனை இணைந்து இயங்கினார்
இட்டம் இவரது யாதும் செய்திலர்
இன்றும் இவரை வியந்து பார்க்கின்றோம்
ஆயர் மோசே ஆடுகளை மேய்த்தார்
ஆண்டவர் இவரை அழைத்துப் பேசினார்
அடியவர் மோசே பயந்து நடுங்கினார்
ஆண்டவர் திருமுன் இயலாமைச் சொன்னார்
ஆட்டிடையர் கோலுடன் மோசே நின்றார்
அற்புதம் செய்திட கோ—ல் உதவினார்
ஆண்டவர் மோசேக்கு அதிசயங்கள் காட்டினார்
அவனியில் கோல்பட அரவம் ஆனதாம்
அரவத்தைப் பிடிக்கக் கோலாய் ஆனதாம்,
அற்புத வரலாற்றில் இறைவன் தொடர்கிறார்
அண்ணல் மோசே தன்குறைச் சொன்னார்
ஆண்டவர் அவர்க்கு நாவன்மை ஈந்தார்
இறைவன் அதிசயம் உடமையில் செய்கிறார்
இதனால் மக்கள் இறைவனில் மகிழ்கிறார்
இறைவனின் அதிசயம் உரியோரில் செய்கிறார்
இதனால் உறவில் உரியவர் மகிழ்கிறார்

இஸ்ரயேலரின் சமயத்தை உலகறியச் செய்ய, இறைவன் பயன்படுத்திய மாபெரும் மனிதர் மோசே, அரசிளங் குமாரராய், ஆட்டிடையராய், ஆண்டவரின் மக்களை நடத்தும் பணியாளாய் பணி செய்த பெருமைக்குரியவர். இஸ்ரவேலரை எகிப்தி—ருந்து மீட்கக் கடவுள் மோசேயை அழைத்தபோது மோசே கடவுளிடம் "நான் வாக்கு வல்லவன் அல்ல; நான் திக்கு வாயும் மந்தநாவும் உள்ளவன் என்றான்" (யாத். 4 : 10). அதற்குக் கடவுள் நான் உன் வாயோடே இருந்து நீ பேச வேண்டியதை உனக்கு போதிப்பேன் என்றார் (யாத். 4 : 12). அத்துடன் கடவுள் மோசேயிடம், "ஆரோன் உனக்கு வாயாக இருப்பான். அவன் உனக்கு பதிலாக மக்களோடே பேசுவான் என்றார்" (யாத். 4 : 16). இறைவன் நம்முடனிருந்து தமது ஆற்றலை நமக்குத் தந்து, நம்மை ஆற்றலுள்ளவராக அகிலத்திற்குக் காட்டுகின்றார். நாம் இறை அருளால், அவர் ஆற்றல் பெற்றுள்ளோம் என்ற உணர்வுடன் வாழ்வோம்.

2011
ஜூலை
31
ஞாயிறு

காலை
யோவா. 21:15–19

தி. வ.
யோவா. 21:19
**“...என்னைப் பின்வற்றிவா”**

மாலை
சங். 118:1–9

சிந்தனை
**பணி செய்ய அழைக்கிறார் பாசம் கொண்ட துன்புறும் பணியாளர்**

மன்னா சேர்ப்போம்

# பணி செய்வதற்கான அழைப்பு

அரசியல் தலைவரை ஆயிரமாயிரம் தொடருகின்றார்
அற்புதம் செய்வோரை ஆயிரமாயிரம் தொடருகின்றார்
ஆற்றல் உள்ளோரை ஆயிரமாயிரம் தொடருகின்றார்
ஆடிப் பாடுவோரை ஆயிரமாயிரம் தொடருகின்றார்

ஆன்மீக உலகில் பவுலைத் தொடர்ந்தவர் பலர்
ஆன்மீக உலகில் கேபாவைத் தொடர்ந்தவர் பலர்
ஆன்மீக உலகில் அப்பல்லோவைத் தொடர்ந்தவர் பலர்
ஆன்மீக உலகில் கிறிஸ்துவைத் தொடர்ந்தவர் பலர்

பணி செய்தார் இறைவன் பாரில் மானுடர்க்காய்
பரமன் பணியில் இன்றும் தொடர்கிறார்
பாசமுள்ள இறைமகன் பாரில் பணி செய்தார்
பாரில் தூயாவியாராய் இன்றும் தொடர்கிறார்

இயேசு தன் பணிக்காய் மீனவரை அழைத்தார்
இயேசு தன் பணிக்காய் ஆயக்காரரை அழைத்தார்
இயேசு தன் பணிக்காய் உயிர்த்தும் அழைத்தார்
இயேசு தன் பணிக்காய் உணவூட்டி அழைத்தார்

காயமேற்ற கடவுள் அன்பாய் அழைக்கிறார்
காயமேற்ற கடவுள் அன்புக்காய் அழைக்கிறார்
காயமேற்ற கடவுள் பணிதொடர அழைக்கிறார்
காயமேற்றவர் பாதச்சுவடை தொடர அழைக்கிறார்

இறைவன் காணப்படுகிறவைகளையும், காணப்படாதவைகளையும், தம் பணியால் படைத்தார். இறைமகன் இம்மண்ணில் பணி செய்பவராக வாழ்ந்தார். மீட்புப் பணியில் தன்னை இணைத்துக் கொண்ட இயேசுகிறிஸ்து, இந்த மீட்புப் பணியில் சிலுவையில் மரித்தார். மரித்து உயிர்த்த கிறிஸ்து தொடர்ந்து தன்பணியை மானுடத்திற்கு செய்ய விரும்பினார். ஆறாத காயங்கள் அருள் நாதரி—ருந்தும், தம் பணியை தொடர்ந்து செய்வதற்காய் மானுடத்தை தேடினார். இவரது தேடுதல் திபேரியா கடற்கரையில் நடந்தது (யோவா 21 : 1). இயேசு, உணவின்றி பசியி—ருந்த சீடர்களுக்கு அப்பத்தையும் மீனையும் கொடுத்தார் (யோவா 21 : 13). தமது சீடராகிய சீமோன் பேதுருவை நோக்கி என் ஆட்டுக் குட்டிகளை மேய்ப்பாயாக, என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். இன்றும் இயேசுகிறிஸ்து அவர் பணி செய்ய அவருடைய பிள்ளைகளாகிய நம்மை அழைக்கிறார். சப்தம் கேட்போம், அர்ப்பணிப்போம்.